செய்தி வெளியீடு எண்: 290 நாள் : 15.05.2016

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் விருதுகள் 2015

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு சிறப்பாகப் பணியாற்றி வரும் கல்வி நிறுவனங்கள், தனி நபர், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு 2015–ஆம் ஆண்டின் 'சுற்றுச்சூழல் விருதுகள்' வழங்கி கௌரவிப்பதற்குத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது.

| விருதுகளின் விவரம் | தகுதியுடைய நபர்கள் |
|---|---|
| 1) சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு | சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்கள் / கல்வியாளர்கள் / தனி நபர்கள் |
| 2) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை | அ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் சிறந்து விளங்கும் தனி நபர்கள்<br>ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் சிறந்து விளங்கும் நிறுவனங்கள் |

1) விண்ணப்பதாரர் தனிநபராக இருப்பின் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.

2) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி பிரிவில் தனிநபர் மற்றும் நிறுவனங்கள் தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

3) கடந்த மூன்று ஆண்டுகளில் தனிநபர் / நிறுவனம் செய்த பணிகள் மட்டுமே விண்ணப்பத்தில் இடம்பெற வேண்டும்.

4) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி பிரிவின் கீழ் அறிவிக்கையில் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்த பணிகளை மட்டும் நிறுவனங்கள் சமர்ப்பிக்கலாம். தனி நபராக இருப்பின் தமிழக அரசால் வேறு எந்த விருதுகளுக்கும் அனுப்பப்படாத பணிகளின் விவரம், அவற்றின் பயன் மற்றும் விவரங்களை அறிக்கையுடன் இணைத்தல் வேண்டும்.

5) தனிநபர் எந்த நிறுவனத்திலும் பணி புரிபவராக இருத்தல் கூடாது. ஆனால் பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் தனிநபர் செய்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்து விண்ணப்பிக்க தகுதியுடையவர்.

6) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பிரிவில் விண்ணப்பிக்கக்கூடிய தனிநபர்/நிறுவனம் அறிவிக்கையில் குறிப்பிட்ட கால கட்டத்தில் மேற்கொண்ட களப்பணி மற்றும் அதைச் சார்ந்த பிரசுரங்கள், பத்திரிக்கை குறிப்புகள், திட்ட அறிக்கைகள், அதனால் ஏற்பட்ட பயன்பாடு, பயனாளிகள்/பங்கு பெற்றோர் எண்ணிக்கை குறித்த தகவல்கள் இடம்பெற வேண்டும்.

7) மேற்கொண்ட களப்பணியை சம்பந்தப்பட்ட துறையின் அதிகாரிகள்/தேர்வுக் குழுவினர் தணிக்கை செய்வார்கள்.

8) ஏதேனும் ஒரு பிரிவில் மட்டுமே தனிநபர்/நிறுவனம் விண்ணப்பிக்கலாம்.

9) மேற்கண்ட மூன்று பிரிவிற்கும் அப்பிரிவின் எதிரே குறிப்பிட்டுள்ள தகுதியுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த நபர்கள் / நிறுவனங்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

10) மேற்கண்ட மூன்று பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிற்கும் என உள்ள தனித்தனி விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

11) ஏற்கனவே சுற்றுச்சூழல் துறையால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்ட நபர்கள் / நிறுவனங்கள் மீண்டும் விருதுகள் பெற விண்ணப்பிக்க இயலாது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் ஆறு நகல்களில் ‘இயக்குநர், சுற்றுச்சூழல் துறை’ (Director, Department of Environment) என்ற பெயரில் ரூ.100/—க்கான கேட்புக் காசோலையுடன் மூன்று புகைப்படங்களையும் (Passport size) இணைத்து அனுப்ப வேண்டும்.

**சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ரொக்கப் பரிசு**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கட்டுரை | சுற்றுச்சூழலின் சிறந்த மேலாண்மைக்கு வித்திடும் ஆராய்ச்சியாளர்கள் / ஆராய்ச்சி நிறுவனங்கள் |

1) சிறந்த சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஊக்குவிக்கும் வண்ணம் 2015— ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் டிசம்பர் 2015 வரை வெளியான, தனிநபர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டோர் இணைந்து உருவாக்கிய, சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ரொக்கப் பரிசும், பாராட்டு மடலும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2) ஆராய்ச்சிக் கட்டுரைகள் தமிழிலும் / ஆங்கிலத்திலும் தரமான ஆராய்ச்சி ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டவைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

3) ஆங்கில கட்டுரையானால் ஆராய்ச்சி கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு இணைக்கப்பட வேண்டும்.

4) இதற்கு ஆதாரமாக எந்த ஆராய்ச்சி/அறிவியல் ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டது என்ற விவரம் அளித்தல் வேண்டும்.

5) இந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் பிரசுரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

6) ஆராய்ச்சி கட்டுரை பிரிவின்கீழ் சம்பந்தப்பட்ட தலைப்பில் புத்தகமாக வெளியிடப்பட்டிருப்பின் (தமிழிலும்/ஆங்கிலத்திலும்), அந்த புத்தகம் முழுமையாக இணைத்தல் வேண்டும்.

7) ஆராய்ச்சி கட்டுரை மற்றும் புத்தகம் ஒன்றுக்கு மேற்பட்ட நப்ர்கள் சேர்ந்து பிரசுரம் செய்திருந்தால், முதல் நபர் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்.

8) ஆராய்ச்சிக் கட்டுரையின் நான்கு நகல்கள் அனுப்பப்பட வேண்டும்.

9) ஏற்கனவே விருது பெற்ற தனி நபர் / ஒன்றிற்கு மேற்பட்டோர் மீண்டும் விருது பெற விண்ணப்பிக்க இயலாது.

இவ்விருதுக்குரிய விண்ணப்பப் படிவங்களை, இயக்குநர், சுற்றுச்சூழல் துறை, தரை தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–600 015 என்ற முகவரியிலிருந்து அனைத்துப் பணி நாட்களிலும் 20.06.2016 முதல் 18.07.2016 வரை காலை 10.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பத்தினை இத்துறையின் வலைதளத்திலிருந்தும் படி எடுத்துக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| வலைதள முகவரி | – www.environment.tn.nic.in |
| தொலைபேசி எண் | – 2433 6421 / நிகரி 2433 6594 |

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் வழங்கும் நாள் | – 20.06.2016 முதல் 18.07.2016 வரை |
| விண்ணப்பங்கள் பெறுவதற்குரிய கடைசி நாள் | – 18.07.2016 (மாலை 5.00 மணி வரையில்) |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | – 20.07.2016 |

சுற்றுச்சூழல் துறை இயக்குநருக்காக

**சுற்றுச்சூழல் துறை, சென்னை—600 015**
**சுற்றுச்சூழல் விருதுகள் – விண்ணப்பபடிவம்**

**பிரிவு "1" சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு**

01. விண்ணப்பதாரர் பெயர்
மற்றும் முகவரி
(அஞ்சலக குறியீட்டு எண்ணுடன்)

02. அரசு சாரா நிறுவனமாயின்
பதிவு எண், தேதி மற்றும் வருடம்

03. கல்வி நிறுவனம்
(அ) துவங்கபட்ட ஆண்டு
(ஆ) அரசால் அங்கீகரிக்கப்பட்ட விவரம்

04. தொடர்பு அலுவலரின் பெயர்
மற்றும் முகவரி தொலைபேசி
எண்களுடன்

05. தனிநபராக இருப்பின் மூன்று
நிழற்படம் மற்றும் நிழற்படத்தின் தகடு
இணைக்கப்பட வேண்டும்

06. இதற்கு முன்னர் சுற்றுச்சூழல் கல்வி
மற்றும் விழிப்புணர்வுக்ப்புக்கென
பெறப்பட்ட விருதுகள் விவரங்கள் (ஏதுமிருப்பின்)

07. சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வுக்கென
அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளிடமிருந்து
பெறப்பட்ட நிதி பற்றிய விவரங்கள்

08 சுற்றுச்சூழல் கல்வி மற்றும்
விழிப்புணர்வில் கடந்த மூன்றாண்டுகள்
மேற்கொண்ட பணிகள்*

| பயிற்றுனர் களுக்கான பயிற்சிகள் | மாணவர்களு க்கான முகாம்கள் | நடத்தப்பட்ட பேரணிகள் மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த தினங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகள் | இது வரை சுற்றுச்சூழல் கல்வி பற்றி பயிற்சி பெற்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை | பத்திரிகை வெளியீடுகள் மற்றும் புகைப்படங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

09. பதிவு கட்டணம்
( வங்கிக் காசோலை மற்றும் தேதி)

விண்ணப்பதாரர் கையொப்பம்

* இணைப்பில் கண்டுள்ள அறிவுறுத்தல்களின்படி விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் விரிவான முறையில், தேதி வாரியாக ஒப்பத்தக்க சான்றுகளுடன், புகைப்படங்கள், பத்திரிக்கை குறிப்புகள், பிரசுரங்கள் போன்றவை ஏதுமிருப்பின், அதன் நகல்களுடன் தனியாக இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பபடிவம் மற்றும் இணைப்புகள் ஆறு நகல்கள் கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும்.

**சுற்றுச்சூழல் துறை, சென்னை–600 015**
**சுற்றுச்சூழல் விருதுகள் – விண்ணப்பப் படிவம்**
**பிரிவு "2" சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை**
**அ) தனிநபர்**

01. விண்ணப்பதாரர் பெயர்
மற்றும் முகவரி
(அஞ்சலக குறியீட்டு எண்ணுடன்)

02. விண்ணப்பதாரரின் தொலைபேசி எண்

03. விண்ணப்பதாரரின் மூன்று
நிழற்படம் மற்றும் நிழற்படத்தின் தகடு
இணைக்கப்பட வேண்டும்

04. இதற்கு முன்னர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு./மேலாண்மைக்கென
பெறப்பட்ட விருதுகள் விவரங்கள் (ஏதுமிருப்பின்)

05. சுற்றுச்சூழல் பாதுகாப்பு /மேலாண்மை பணிகளுக்காக
அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளிடமிருந்து
பெறப்பட்ட நிதி பற்றிய விவரங்கள்

06 சுற்றுச்சூழல் பாதுகாப்பு /மேலாண்மை குறித்து
கடந்த மூன்றாண்டுகளில்
மேற்கொண்ட பணிகளின் விவரம்*

1. வேளாண்மை/ காடு வளர்ப்பு நீர் ஆதாரங்கள் பாதுகாப்புக்கென செய்யப்பட்ட பணிகள்
2. காற்று மாசு தடுப்பு பணிகள்
3. சுற்றுச்சூழல் நலவாழ்வு பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகள்
4. நிலவள மேம்பாடு
5. நீர் வள மேம்பாடு
6. கழிவுகள் மேலாண்மை (திடக்கழிவு மற்றும் திரவ கழிவு)
7. இயற்கை சீற்றங்களினால் விளையும் அழிவுகள் மேலாண்மை
8. வானிலை மேலாண்மை
9. சுற்றுச்சூழல் கல்வி மேலாண்மை உத்திகள்
10. இயற்கை – மனிதன் உறவுகள்

07. பதிவு கட்டணம்
( வங்கிக் காசோலை மற்றும் தேதி)

விண்ணப்பதாரர் கையொப்பம்

* இணைப்பில் கண்டுள்ள அறிவுறுத்தல்களின்படி விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் விரிவான முறையில், தேதி வாரியாக ஒப்பத்தக்க சான்றுகளுடன், புகைப்படங்கள், பத்திரிக்கை குறிப்புகள், பிரசுரங்கள் போன்றவை ஏதுமிருப்பின், அதன் நகல்களுடன் தனியாக இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பபடிவம் மற்றும் இணைப்புகள் ஆறு நகல்கள் கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும்.

**சுற்றுச்சூழல் துறை, சென்னை–600 015**
**சுற்றுச்சூழல் விருதுகள் – விண்ணப்பபடிவம்**
**பிரிவு "2" சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு**
**ஆ) நிறுவனங்கள்**

01. நிறுவனத்தின் பெயர்
மற்றும் முகவரி
(அஞ்சலக குறியீட்டு எண்ணுடன்)

02. நிறுவனம்
(அ) துவங்கபட்ட ஆண்டு
(ஆ) அரசால் அங்கீகரிக்கப்பட்ட விவரம் (இருப்பின்)

03. தொடர்பு அலுவலரின் பெயர்
மற்றும் முகவரி தொலைபேசி
எண்களுடன்

04. சுற்றுச்சூழல் பாதுகாப்பு / மேலாண்மைக்கு ஏற்கனவே
பெறப்பட்ட விருதுகளின் விவரங்கள் (ஏதுமிருப்பின்)

05. சுற்றுச்சூழல் பாதுகாப்பு / மேலாண்மை பணிகளுக்காக
அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளிடம்
இருந்து பெறப்பட்ட நிதி பற்றிய விவரங்கள்

06. சுற்றுச்சூழல் பாதுகாப்பு / மேலாண்மையில்
கடந்த மூன்றாண்டுகளில் மேற்கொண்ட பணிகள்
பற்றிய விவரங்கள்*
வேளாண்மை/ காடு வளர்ப்பு நீர் ஆதாரங்கள் பாதுகாப்புக்கென செய்யப்பட்ட பணிகள்

1. காற்று மாசு தடுப்பு பணிகள்
2. சுற்றுச்சூழல் நலவாழ்வு பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகள்
3. நிலவள மேம்பாடு
4. நீர் வள மேம்பாடு
5. கழிவுகள் மேலாண்மை (திடக்கழிவு மற்றும் திரவ கழிவு)
6. இயற்கை சீற்றங்களினால் விளையும் அழிவுகள் மேலாண்மை
7. வானிலை மேலாண்மை
8. சுற்றுச்சூழல் கல்வி மேலாண்மை உத்திகள்
9. இயற்கை – மனிதன் உறவுகள்

07. பதிவு கட்டணம்
( வங்கிக் காசோலை மற்றும் தேதி)

அங்கீகரிக்கப்பட்ட நபரின் கையொப்பம்

* இணைப்பில் கண்டுள்ள அறிவுறுத்தல்களின்படி விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் விரிவான முறையில், தேதி வாரியாக ஒப்பத்தக்க சான்றுகளுடன், புகைப்படங்கள், பத்திரிக்கை குறிப்புகள், பிரசுரங்கள் போன்றவை ஏதுமிருப்பின், அதன் நகல்களுடன் தனியாக இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பபடிவம் மற்றும் இணைப்புகள் ஆறு நகல்கள் கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும்.

**<u>சிறந்த சுற்றுச்சூழல் ஆராய்ச்சி கட்டுரைக்குரிய விருதுக்கான விண்ணப்பப் படிவம்</u>**

01. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி :

02. பிறந்த தேதி :

03. கல்வித் தகுதி :

04. தற்போது வகிக்கும் பதவி மற்றும் நிறுவனத்தின் முகவரி :

05. இதற்கு முன்பு வகித்த பதவிகள் :

06. சிறப்பு தகுதி பெற்றுள்ள துறை :

07. கடந்த மூனறாண்டுகளில் விண்ணப்பதாரரின் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி குறித்த விவரம் :

08. விருதுக்காக அனுப்பப்பட்டுள்ள கட்டுரை வெளியிடப்பட்டுள்ள காலமுறை வெளியீடு/ புத்தகம், வெளியிடப்பட்ட ஆண்டு, மாதம், இதழ் (தொகுதி) குறிப்பிடுக (கட்டுரையின் மூன்று நகல்கள் இணைக்கப் பட வேண்டும்) :

09. விண்ணப்பதாரர் இதற்கு முன்பு விருதுகள் பெற்றுள்ளார் எனில், அது பற்றிய விவரம் :

10. விண்ணப்பதாரரைப் பற்றி நன்கு அறிந்த மூன்று வல்லுநர்களின் பெயர் மற்றும் முகவரி :

11. <u>சான்று</u>:

ஆராய்ச்சிக் கட்டுரை முற்றிலும் என்னுடைய சொந்த முயற்சியே ஆகும். ஏற்கனவே வெளியானதோ, மொழிபெயர்ப்போ அல்லது வேறு பரிசுகள் பெற்றதோ இல்லையென சான்றளிக்கிறேன். ஆராய்ச்சிக் கட்டுரை ஜனவரி 2015 – டிசம்பர் 2015 ற்குள் வெளியிடப்பட்டிருக்கப்பட வேண்டும். (ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் முயற்சியால் உருவாக்கம் செய்யப்பட்டிருப்பின், அனைவரின் விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும்). பூர்த்தி செய்யப்பட்ட படிவம் இணைப்புகள் நான்கு நகல்கள் அனுப்பப்படுதல் வேண்டும்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

*இணைப்பில் கண்டுள்ள அறிவுறுத்தல்களின்படி விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9